சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் எழும்பூர் வடக்கு பகுதியில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 103 வது பிறந்தநாள் விழாவை முன்னிட்டு மாபெரும் இரத்ததான முகாம் மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் க.வினோத் தலைமையில் மாவட்டக் கழகச் செயலாளர் பி.கே.சேகர்பாபு எம்.எல்.ஏ., பகுதிக் கழகச் செயலாளர்கள் சொ.வேலு எம்.சி, வி.சுதாகர் ஆகியோர் முன்னிலையில் கழக சட்டத்துறைச் செயலாளர் என்.ஆர்.இளங்கோ எம்.பி. துவக்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் கே.சந்துரு, கே.எஸ். இரவிச்சந்திரன், தமிழன் பிரசன்னா மற்றும் மாநில நிர்வாகிகள், தலைமை செயற்குழு உறுப்பினர்கள், மாவட்ட கழக நிர்வாகிகள், மண்டலக் குழுத் தலைவர்கள், பகுதிக் கழகச் செயலாளர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், கழக முன்னோடிகள் பலர் கலந்து கொண்டு சிறப்பித்தன

கீழப்பாவூரில் துவக்கப்பள்ளி மாணவர்களுக்கு பாட புத்தகம், சீருடை!

தலைமை ஆசிரியர் சிவக்குமார் தலைமையில்! தென்காசி மரு.கலை கதிரவன் எம்.எல்.ஏ. வழங்கினார்!

தென்காசி.ஜூன் 8- தென்காசி மாவட்டம் (04.06.2026), அன்று தென்காசி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட கீழப்பாவூர் ஒன்றியம், குணராமநல்லூர் ஊராட்சி புல்லுக்காட்டு வலசை ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியில் பள்ளி துவக்க நாள் விழாவில் மாணவர்,மாணவியர்களுக்கு பாடப் புத்தகம், சீருடை மற்றும் பாடப்புத்தகப்பை வழங்கும் நிகழ்வு பள்ளி தலைமை ஆசிரியர் சிவகுமார் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் தென்காசி சட்டமன்ற உறுப்பினர் மரு.கலை கதிரவன் பங்கேற்று சிறப்பித்தார்.

நிகழ்வில் தென்காசி சட்டமன்ற உறுப்பினர் மரு.கலை கதிரவன் மாணவர், மாணவியர்களுக்கு பல்வேறு அறிவுரைகளை வழங்கி உரையாற்றி னார். அதனைத் தொடர்ந்து அரசின் சார்பில் மாணவ,மாணவியர்களுக்கு பாடப்புத்தகங்கள்,சீருடைகள் மற்றும் புத்தகப்பைகள் ஆகியவற்றை வழங்கினார்.

நிகழ்ச்சியில் முன்னாள் ஒன்றிய அவைத்தலைவர் காசிமணி,மாவட்ட வர்த்தக அணி அமைப்பாளர் மா. முத்துக்குமார் மற்றும் நிர்வாகிகள் ராமர், கதிரேசன், முருகேசன், சமுத்திர பாண்டியன்,கிளைச் செயலாளர் மாரிமுத்து,கிருஷ்ணமூர்த்தி, மாரிமுத்து, ஊராட்சி மன்றத் தலைவர் சுபாசக்தி உள்பட கழகத்தினர் மற்றும் ஆசிரியர்கள் மாரியம்மாள், சண்முகவள்ளி, ஜாஸ்மின், சரவணப்ரியா,ஜெயா பிரதாப் சிங், ஆகியோர் கலந்து கொண்டனர்.

விழாவின் மாணவிகள் ஜெயஸ்ரீ, மானிஷா ஸ்ரீ மற்றும் இன்சியா ஆகியோர்களின் கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றது. அதனைத் தொடர்ந்து, புதிய கல்வியாண்டில் மாணவர் சேர்க்கையை ஊக்குவிக்கும் வகையில் பள்ளி மாணவர்களின் சேர்க்கை விழிப் புணர்வு பேரணி நடைபெற்றது.

ஓமன் தி.மு.க. அயலக அணி சார்பில் –

மஸ்கட் மாநகரில் முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்தநாள் விழா!

பி.கே.சிவக்குமார் தலைமையில் நடைபெற்றது!

மஸ்கட், ஜூன் 8

ஓமன் திமுக அயலக அணி சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞரின் 103 வது பிறந்தநாள் விழா மிக விமர்சையாக மஸ்கட் மாநகரில் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியினை ஓமன் திமுக செயலாளர் சிவக்குமார் துவக்கி வைக்க, அவைத்தலைவர் பாலமுருகன் வரவேற்புரை ஆற்றிட, பொருளாளர் சிவசெந்தில் நிகழ்ச்சியினை தொகுத்து வழங்கி நன்றி உரை ஆற்றினார்.

இந்நிகழ்ச்சியில் ஓமன் திமுக அயலக அணி துணை அமைப்பாளர்கள் முகமது பாரூக் அயூப் கான், மற்றும் நிர்வாக குழு சார்ந்த உறுப்பினர்களான முனைவர் சுந்தர வடிவழகன், ராமச்சந்திரன், ஓம் பிரகாஷ், கவிஞர் சுதர்சன், மாணிக்கவேல், தயாநிதி, மார்சலின், ராஜன், பிராங்கிளின், சுவாஜிதின் அபுததிர், கோபாலகிருஷ்ணன், மருத்துவர் மலர்வண்ணன், சுந்தர், மருத்துவர் பஷீர் அகமத், பேச்சி முத்து, பாட்ஷா, காதர், முகமது அன்சாஷ் முகமது இஸ்மாயில், நசீர் கான், ஹாஜா மைதீன், முகமது சுபயான், அகம் மைதீன், வைஸ்லீ பேராசிரியர் மாரி முத்து, ராஜகோபால், கண்ணதாசன், பிரதீப், குமார், சலாருதீன், அப்துல் சமத், கமல் பிரவீன் ராஜ், சதீஷ், தாரிக், ரபிக், காமில் மற்றும் கழக மகளிர் அணியைச் சார்ந்த நிர்வாகிகள் ரேவதி அறிவிச்செல்வி, உமா மகேஸ்வரி, சத்யா, அஸ்மா பேகம், பகரா பாத்திமா, யோகன், அவந்திகா,

கவிஞரீ மற்றும் ஓமன் திமுக GENZ குரூப்ஸ் மற்றும் பல்வேறு துறையை சார்ந்த வல்லுனர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர். இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டு பேசிய அனைவரும் நம் சமூக நீதியின் சூரியன் கலைஞர் அவர்களால் தமிழ்நாட்டிற்கு ஏற்பட்ட அரை நூற்றாண்டு சாதனைகளை வரலாற்றுச் செய்திகளை பேசியது சிறப்பு வாய்ந்ததாக அமைந்திருந்தது.

முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களால் ஒவ்வொரு குடும்பமும் பெற்ற நன்மைகளும், கலைஞர் அவர்கள் ரத்து செய்த நுழைவுத் தேர்வுகளைப் பற்றியும் அடிப்படை கல்வி முதல் கல்லூரி கல்வி வரை அவர் நம் தமிழ் சமூகத்திற்கு செய்த எண்ணற்ற நன்மைகளும் குறிப்பாக பெண்களின் முன்னேற்றத்திற்காக அவர் கொண்டு வந்த சீர் திருத்தங்களும் என அனைத்து தகவல் களஞ்சியங்களும் அனைவருக்கும் அறியும் வண்ணம் எடுத்து ரைக்கப்பட்டது.

தமிழ்த்தாய் வாழ்த்துக்களோடு தொடங்கப்பட்ட இந்த நிகழ்ச்சி இறுதியில் அனைவரின் மனதிலும் “ கலைஞர் ஓர் சகாப்தம்” என்ற எண்ணங்களோடு மீண்டும் கழக ஆட்சியினை கொண்டு வர வேண்டும் என்று உறுதி மொழி ஏற்பு நிகழ்ச்சியாக முடிந்தது.

தமிழ்நாட்டில் 2025-26 ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி

8.26லட்சம் ஈரநிலை மற்றும் நில வாழ் பறவைகள் உள்ளன!

வனத்துறை செயலாளர் அறிவிப்பு!

சென்னை, ஜூன் 8- தமிழ் நாடு அரசின் வனத்துறை செயலாளர் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கை:

தமிழ்நாடு வனத்துறை 2025 டிசம்பர் 27 மற்றும் 28 ஆகிய தேதிகளில் தமிழ் நாடு ஒருங்கிணைந்த ஈரநில பறவைகள் கணக்கெடுப் பையும், 2026 பிப்ரவரி 14 மற்றும் 15 ஆகிய தேதிகளில் தமிழ்நாடு ஒருங்கிணைந்த

நிலவாழ் பறவைகள் கணக்கெடுப்பையும், வனத் துறைஅதிகாரிகள், பறவை நிபுணர்கள், தன்னார்வலர் கள்மற்றும் பறவை பார்வை யாளர்களின் தீவிர பங் கேற்புடன் நடத்தப் பட்டது. இதில் ஏரிகள், பாசனக் குளங்கள், சதுப்பு நிலங்கள், நீர்த்தேக்கங்கள் மற்றும் பிற முக்கிய நீர்நி லைகள் அடங்கும்.

இந்த ஆய்வின்போது, ஈரநிலச் சூழலமைப்பு களு டன் தொடர்புடைய மொத்தம் 393 பறவை இனங்கள் பதிவுசெய்யப் பட்டன. நேரடி எண்ணிக் கையில் 6,01,348 பறவைகள் கணக்கிடப்பட் டன. இவற் றில் 116 இனங் கள் நீர்ப்பற வைகளாகவும், 131 இனங் கள் வலசைப் பற வைகளா கவும் இருந்தன. அவற்றின் மொத்த எண் ணிக்கை 1,59,557 ஆகும்.

பொதுவாக பதிவான இனங்களில் லிட்டில் கார் மரண்ட், குளோஸ்ஸி ஐபிஸ், லிட்டில் எக்ரெட், ஈஸ்டர்ன் கேட்டில் எக் ரெட், இந்தியன் பாண்ட் ஹெரான், நார்தர்ன் பின் டெயில், லிட்டில் ஸ்டின்ட், கிரேட்டர் பிளாமிங்கோ மற்றும் கார்கனே ஆகியவை அடங்கும். மேலும், IUCN சிவப்பு பட்டியலில் அச்சுறுத்தப்பட்ட பிரிவு களில் உள்ள 35 பறவை இனங்கள் ளின் இருப்பும் இந்த கணக் கெடுப்பில் பதிவுசெய்யப் பட்டது.

ஒருங்கிணைந்த நில வாழ் பறவைகள் கணக் கெடுப்பு, தமிழ்நாட்டின் அனைத்து 38 மாவட்டங் களிலும் உள்ள காடுகள் மற் றும் நிலவாழ் சூழலமைப்பு களை உள்ளடக் கிய 1108 நிலவாழ் பறவை கணக்கெ டுப்பு இடங்களில் நடத்தப் பட்டது. மொத்தம் 391 பறவை இனங்கள் பதி செய் யப்பட்டு நேரடி எண்ணிக் கையில் 2,24,801 பறவைகள் கணக்கிடப்பட் டன.

இவற்றில் 228 இனங் கள் உள்ளூர் பறவைக ளாகவும், 72 இனங்கள் வலசை பற வைகளாகவும் இருந்தன. இந்த கணக்கெ டுப்பில் பதி வான முக்கிய பறவைகள் இனங்களில் நாப்பில்ட்டக், காட்டன் பிக்மி கூஸ், கார் கனே, நார் தர்ன் ஷோவ லர், யூரேஷியன் விஜியன், நார்தர்ன் பின்டெயில், ரெட் ஸ்பர்ஃப வுல், பெயிண்டெட் புஷ் கொய்ல், நீலகிரி மர புறா, ஓரியண்டல் டர்டில்டவ், ஏஷியன் மரகதபுறா, கிரீன் இம்பீரியல் புறா, மலபார் இம்பீரியல் புறா மற்றும் இலங்கை ப்ராக்மவுத் ஆகியவை அடங்கும்.

ஈரநிலச் சூழலமைப்பு கள், காடுகள், கடலோர வாழிடங்கள், கழிமுகங்கள், மாங்குரோவ் காடுகள், நீர்த் தேக்கங்கள் மற்றும் ஆயிரக் கணக்கான பாசனக் குளங் கள் ஆகியவற்றின் இருப்பி னால் தமிழ்நாடு வளமான பறவைகள் பன் முகத்தன் மையை ஆதரிக்கிறது.இவை பறவைகளுக்கு உணவ ளிப்பு, இனப்பெருக்கம் மற் றும் ஓய்வு எடுக்கும் முக்கிய வாழிடங்களாக விளங்கு கின்றன.

இவ்வாறு அதில் கூறப் பட்டுள்ளது.

நெல்லை மேற்கு மாவட்டக் கழகச் செயற்குழுக் கூட்டம்!

மாவட்டப் பொறுப்பாளர் இரா.ஆவுடையப்பன் அறிக்கை!

நெல்லை, ஜூன் 8- நெல்லை மேற்கு மாவட்ட தி.மு.க. பொறுப் பாளர் இரா.ஆவுடையப் பன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

கழகத்தலைவர் தளபதி யார் அவர்களின் ஆணைப் படி,நெல்லை மேற்கு மாவட்ட கழக செயற்குழு கூட்டம் நாளை (09.06.2026-செவ்வாய்க்கிழமை) மாலை 04.00 மணி அளவில் நெல்லை மேற்கு மாவட்ட தி.மு.க. அலுவலகத்தில் வைத்து எனது தலைமையில் மாவட்ட பொறுப்பாளர் இரா.ஆவுடையப்பன் தலைமையில் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமை செயற்குழு உறுப் பினர்கள்,மாநில அணி நிர் வாகிகள், பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர,பேரூர் செயலாளர்கள், மாவட்ட சார்பு அணிகளின் அமைப்பாளர்கள் அனை வரும் தவறாது பங்கேற்று கருத்துக்களை வழங்க கேட்டுக் கொள்கிறேன்.

பொருள்:கழக வளர்ச் சிப்பணிகள்.

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

சென்னை தென்மேற்கு மாவட்டம், மயிலை கிழக்கு பகுதி தி.மு.க. சார்பில் காலத்தை வென்ற கழகச்சூரியன் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் பிறந்தநாள் விழாவை முன்னிட்டு நலத்திட்டஉதவிகள் – அறுசுவை உணவு வழங்கும் நிகழ்ச்சி மயிலை கிழக்கு பகுதி செயலாளர் எஸ்.முரளி தலைமையில் நேற்று (07.06.2026 – ஞாயிற்றுக்கிழமை) மயிலை கிழக்கு பகுதி கழக அலுவலகம் சிருங்கேரி மடம் சாலை, ஆர்.ஏ.புரம், சென்னை28 ல் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் சென்னை தென்மேற்கு மாவட்ட கழக செயலாளர் மயிலை த.வேலு நலத்திட்டஉதவிகள் – அறுசுவை உணவு வழங்குகினார். இதில் மயிலை மேற்கு பகுதி செயலாளர் நந்தனம் கி.மதி எம்.சி., எஸ். முனுசாமி, சீமன்கோ.சேகர், பி.எல். தாஸ், ஏ.குமாரி, எல்.உதயகுமார், ஏ. தாஸ், மா.பா.அன்பு, அ.தவநேசன், வி.வெற்றிவேல், கோ.கண்ணன், பா.பொன்னுசாமி, விமலாகிருஷ்ணமூர்த்தி, அ.ரேவதி எம்சி., 171வது வட்ட செயலாளர் துரைபார்த்திபன், 124 அ வட்ட பொறுப்பாளர் மா.பா.அன்பு, 171வது மாமன்ற உறுப்பினர் கீதாமுரளி எம். சி. மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

மாவட்டச் செயலாளர் தளபதி முருகேசன் தலைமையில் – கோவை தெற்கு மாவட்ட –

ஒன்றிய - நகர - பகுதி - பேரூர் கழக மாணவர் அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம்!

மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் சூலூர் ஆர்.பிரபு அறிக்கை!

கோவை, ஜூன்.8- கோவை தெற்கு மாவட்ட - ஒன்றிய - நகர - பகுதி - பேரூர் கழக மாணவர் அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம் சூலூரில் உள்ள மாவட்ட கழக அலுவலகத்தில் இன்று (08.06.2026 திங்கட்கிழமை) மாலை 5.00 மணியளவில் கழக மேற்கு மண்டல பொறுப்பாளர், கோவை தெற்கு சட்டமன்ற உறுப்பினர், முன்னாள் அமைச்சர் வி.செந்தில்பாலாஜி அறிவுறுத்தலின்படி, மாநில மாணவர் அணி செயலாளர் ஜெ.வீரமணி வழிகாட்டுதலின்படி கோவை தெற்கு மாவட்ட கழகச் செயலாளர் தளபதி முருகேசன் தலைமையில், மாநில மாணவர் அணி துணைச் செயலாளர் விஜி கோகுல், மாவட்ட மாணவர் அணி துணை அமைப்பாளர்கள் தண்டாயுதபாணி, பூர்ணசந்திரன், அரவிந்த் வசந்த் ராம், விக்னேஷ், புனிதவதி ஆகியோர் முன்னிலையில் நடைபெற உள்ளது.

அதுசமயம் கோவை தெற்கு மாவட்டத்திற்குட்பட்ட ஒன்றிய - நகர - பகுதி - பேரூர் கழக மாணவர் அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

பொருள் :- முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு “வீழ்வோம் என்று நினைத்தாயோ“ என்ற தலைப்பில் கருத்தரங்கம் நடத்துவது சம்பந்தமாக.

மாணவர் அணி ஆக்கப்பணிகள் குறித்து,

இவ்வாறு கோவை தெற்கு மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் சூலூர் ஆர்.பிரபு தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

தொண்டாமுத்தூர் அ.ரவி தலைமையில் – கோவை வடக்கு மாவட்ட

ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழக மாணவர் அணி நிர்வாகிகள் கூட்டம்!

மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் செ.அந்தோணி ராஜ் அறிக்கை!

கோவை, ஜூன் 8 - கோவை வடக்கு மாவட்ட ஒன்றிய நகர பகுதி பேரூர் கழக மாணவர் அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம் வட கோவையில் அமைந்துள்ள ஒருங்கிணைந்த கோவை மாவட்ட கழக அலுவலகத்தில் 09.06.2026 செவ்வாய்க்கிழமை அன்று மாலை 5.30 மணியளவில் கோவை வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர் தொண்டாமுத்தூர் அ.ரவி தலைமையில் மாநில மாணவர் அணி துணைச் செயலாளர் விஜி கோகுல், மாவட்ட மாணவர் அணி துணை அமைப்பாளர்கள் ஞா.சிவக்குமார், மனோஜ் குமார், தினேஷ்குமார், சரண்யா, ராஜ்திலக் ஆகியோர் முன்னிலையில் நடைபெற உள்ளது.

அதுசமயம் கோவை வடக்கு மாவட்டத்திற்குட்பட்ட ஒன்றிய நகர பகுதி பேரூர் கழக மாணவர் அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்: தமிழ்நாட்டின் நவீன சிற்பி” என்ற தலைப்பில் கருத்தரங்கம் நடத்துவது தொடர்பாக,

மாணவர் அணி ஆக்கப் பணிகள் குறித்து,

இவ்வாறு கோவை வடக்கு மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் செ.அந்தோணிராஜ் தனது அறிக்கையில் தெரிவித் துள்ளார்.

முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 103 வது பிறந்தநாளை முன்னிட்டு திருவள்ளூர் மேற்கு மாவட்டம் விவசாய அணி சார்பில் நலத்திட்ட உதவிகள் வழங்க நிகழ்ச்சி திருவாலங்காடு கிழக்கு ஒன்றியத்தில் மாவட்ட விவசாய அணி அமைப்பாளர் களம்பாக்கம் எம். பன்னீர்செல்வம்ஏற்பாட்டில் ஒன்றிய செயலாளர் எஸ்.மகாலிங்கம், தலைமையில்நடைபெற்றது. இதில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் தலைமை செயற்குழு உறுப்பினருமான வி.ஜி.ராஜேந்திரன் கலைஞர் அவர்களின் படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தி பொதுமக்களுக்கு நலத்திட்ட உதவிகள் மற்றும் அறுசுவை உணவு இனிப்புகள் வழங்கினார் உடன் கழக நிர்வாகிகள் பொதுமக்கள் பலர் உள்ளனர்.